2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மற்றும் திரு. மைதீன் பிச்சை என்பவரின் மகள் செல்வி இர்ஃபானா ஆஷிகா ஆகியோரின் குடும்பத்திற்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) ஆத்தூர் தொகுதி, தெத்துப்பட்டி, யானை தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மதிவாணன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், ஆத்தூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட தெத்துப்பட்டி கிராமத்தைச்சேர்ந்த திரு. வேலுச்சாமி என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர் யானை தாக்கி உயிரிழந்ததற்கு அன்னாரது குடும்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் வனத் துறைமூலம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஈ) காஞ்சிபுரம் மாவட்டம், மாரிமங்கலம், ஆட்டோவில் கடத்தப்பட்டவரைக் காப்பாற்றும் முயற்சியில் உயிரிழந்த திரு. ஏகேஷ் மற்றும் சில இளைஞர்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கூட்டுச் சாலையில், இரவு பணி முடிந்து வீடு செல்வதற்காக 25–12–2019 அன்று ஆட்டோவில் சென்றுகொண்டிருந்த காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மாரிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. லோகநாதன் என்பவரின் மனைவி திருமதி பவானி என்பவர், ஆட்டோ ஓட்டுநர் வழி மாறி வேறு பாதையில் செல்வதையும், ஆட்டோ ஓட்டுநரின் அத்துமீறலாலும் தன்னைக் காப்பாற்றும்படி கூச்சலிட்டதில், அலறல் சத்தம் கேட்டு சாலையோரம் நின்றிருந்த இளைஞர்கள் திரு. ஏகேஷ், திரு. ஈஸ்டர் பிரேம்குமார், திரு. வினீத், திரு. சார்லிபன் மற்றும் திரு. பிரிஸ்டன் பிராங்களின் ஆகியோர், இரு சக்கர வாகனத்தில், ஆட்டோவைத் துரத்திச் சென்று திருமதி பவானியைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.*

இளைஞர்கள் ஆட்டோவைத் துரத்திக்கொண்டு வருவதை அறிந்த ஆட்டோ ஓட்டுநர், ஆட்டோவை விரைவாக ஓட்ட, திருமதி பவானி ஆட்டோவிலிருந்து குதித்தார். இதனைப் பார்த்த பொதுமக்கள், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2020 ஜனவரி 9*

ஆட்டோவிலிருந்து குதித்ததால் சிறு காயமடைந்த திருமதி பவானி சிகிச்சை முடிந்து, மறுநாளே வீடு திரும்பினார்.

இந்நிகழ்வில், மேற்படி இளைஞர்கள் இரு சக்கர வாகனத்தில், ஆட்டோ ஓட்டுநரைப் பிடிக்கச் சென்றபோது, ஏற்பட்ட விபத்தில், திரு. ஏகேஷ் என்பருக்கு பலத்த காயமும், மற்றவர்களுக்கு சிறு காயமும் ஏற்பட்டது. பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உயரிய சிகிச்சை அளித்தும், சிகிச்சை பலனின்றி திரு. ஏகேஷ் என்பவர் 27–12–2019 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

முற்பகல் 11–15

இச்சம்பவத்தில், ஆட்டோ ஓட்டுநர் கைது செய்யப்பட்டு, அவர்மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இளைஞர்கள் திரு. ஏகேஷ், திரு. ஈஸ்டர் பிரேம்குமார், திரு. வினீத், திரு. சார்லிபன் மற்றும் திரு. பிரிஸ்டன் பிராங்களின் ஆகிய ஐந்து பேரும் தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல், திருமதி பவானியை ஆபத்திலிருந்து காப்பாற்றிய வீரத்தையும், சமூகப் பொறுப்புணர்வையும் நான் மனதாரப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது போன்ற நிகழ்வுகளில் காவல் துறையினருடன் இணைந்து, இளைஞர்களும், பொதுமக்களும், தவறைத் தட்டிக் கேட்கவும், போராடவும், துணிச்சலுடன் செயல்படுவது மிகவும் பாராட்டிற்குரியது.

இச்சம்பவத்தில் தனது உயிரை துச்சமென மதித்து, ஆபத்திலிருந்த பெண்ணைக் காப்பாற்றியதோடு மட்டுமின்றி, தவறு செய்த ஆட்டோ ஓட்டுநரைப் பிடிக்கப் போராடி உயிரிழந்த திரு. ஏகேஷ் அவர்களின் தீரச் செயலையும், சமூக அக்கறையையும், அவரது குடும்ப நிலையையும் கருத்தில் கொண்டு சிறப்பினமாக, அவரது குடும்பத்திற்கு 10 இலட்சம் ரூபாயும்; (மேசையைத் தட்டும் ஒலி) இவ்விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவரும் திரு. பிரிஸ்டன் பிராங்களின் என்பவருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்த திரு. ஈஸ்டர் பிரேம்குமார், திரு. வினீத் மற்றும் திரு. சார்லிபன் ஆகியோருக்கு தலா 25,000 ரூபாயும் முதலமைச்சரின்

பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கண்ட சம்பவங்களில் உயிரிழந்தவர்களின்குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(உ) கன்னியாகுமரி, களியக்காவிளை சோதனைச் சாவடியில் பணியிலிருந்தபோது சுடப்பட்டு உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி, களியக்காவிளை சோதனைச் சாவடியில் பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன், அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்டு உயிரிழந்த விவரம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு–கேரள மாநில எல்லையான கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் சோதனைச் சாவடி அமைத்து காவல் துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

இச்சோதனைச் சாவடியில் நேற்று (8–1–2020) இரவு 8–00 மணி முதல் களியக்காவிளை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர், திரு. வில்சன் என்பவர் பணியில் இருந்தார். அப்போது இரவு சுமார் 9–30 மணியளவில் அங்கு வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சனை கைத்துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்திவிட்டும் தப்பிச் சென்றுள்ளனர். சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் காயங்கள் ஏற்பட்டு, நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளார்.

இது குறித்து தகவலறிந்த காவல் துறையினர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று, காயமடைந்த திரு. வில்சனை மீட்டு, குழித்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர், திரு. வில்சன் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி அறிந்த தெற்கு மண்டல காவல் துறைத் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட காவல்